மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: அ.வீரமுத்துக்குமார், பி.டெக்.,

நக.எண்: 2132/2025/எப்1 **நாள்:24.12.2025**

பொருள்:	மனைப்பிரிவு - மயிலாடுதுறை நகராட்சி – வார்டு எண்- 08, பிளாக் எண்-16, சர்வே எண்கள் 741/1 மற்றும் 746/1 இல் 19690.70 சதுரமீட்டர் பரப்பளவில் அமையும் - குடியிருப்பு மனைப்பிரிவு - SWP/L.P/DTCP/Ma. Ma No:09/2025 -ன்படி தொழில்நுட்ப ஒப்புதல் உத்தரவு வழங்கியது – இறுதி உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.
பார்வை:	1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மயிலாடுதுறை மாவட்டம், அவர்களின் உத்தரவு, ந.க.எண்: DT1SPJQ4/2025/2025/டிசிபி , நாள்:20.05.2025 . 2. மயிலாடுதுறை எண்1 இணை சார் பதிவாளர் அலுவலக பத்திர ஆவண எண்:1180/2025 நாள்:12.05.2025. 3. மயிலாடுதுறை நகராட்சி நகரமன்ற தீர்மான எண்:1173, நாள்:24.12.2025.

//////

உத்தரவு:

பார்வை 1- இல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மயிலாடுதுறை, அவர்களது உத்தரவின்படி வார்டு எண்- 08, பிளாக் எண்-16, சர்வே எண்கள் 741/1 மற்றும் 746/1 இல் 19690.70 சதுரமீட்டர் பரப்பளவில் 96 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி மற்றும் வரைபட ஒப்புதல் எண்: SWP/L.P/DTCP/Ma. Ma No:09/2025 இன் படி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் சாலை 5,550.92 சதுர மீட்டர், பூங்கா 1423.31 சதுரமீட்டர், பொது உபயோகம் இடம் 91.38 சதுர மீட்டர் மற்றும் மின் வாரியத்திற்கு 75.97 சதுர மீட்டர் ஆகியவை பார்வை 2- இல் கண்டுள்ள தானபத்திரம் மூலம் மனைப்பிரிவு உரிமையாளர்களான சுபம் புரோமோட்டர்ஸ் திரு S.ஸ்ரீநிவாசன், N. பன்னீர்செல்வம் மற்றும் M. ஹாஜா நஜீமுதீன், என்பவர்களால் மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனைப்பிரிவு அனுமதிக்கான பின்வரும் விவரப்படி கட்டணங்கள் மனைப்பிரிவு உரிமையாளரால் நகராட்சி மற்றும் மின் வாரியத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

வ.எண்	கட்டணங்கள் விபரம்	கட்டணம் ரூ	செலுத்துச்சீட்டு எண் மற்றும் நாள்
1	மனைப்பிரிவு வளர்ச்சி கட்டணம்	22,500 மற்றும் 2,500	097/001/1/25-26/0004999 & 097/001/1/25-26/0004997 நாள் : 27.10.2025
2	சாலை மற்றும் அடிப்படை வசதிகள் பராமரித்தல் கட்டணம்	5,00,000	097/001/1/25-26/0004998 நாள் : 27.10.2025
3	மின் விளக்கு கம்பங்கள் அமைத்தல் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டது	5,62,150	PGCCAN783523139 நாள் : 11.09.2025

மேலும் சாலை, பூங்கா மற்றும் பொதுப்பயன்பாட்டு இடங்கள் நகராட்சி ஆணையர் என நில அளவை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது, மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான பாதாள சாக்கடை குழாய், குடிநீர் குழாய் மற்றும் தார் சாலை போடப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் சான்று அளித்துள்ளார். 96 மனைகளுக்கும் நகராட்சியால் காலி மனை வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், நகராட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கிட பார்வை 3-ன்படி இறுதி ஒப்புதல் வழங்கிட நகர மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, நகர ஊரமைப்புதுறையின் நிபந்தனைகளுக்குட்படுத்தி மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவு வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. மனைகள் விற்பனையின்போது SWP/L.P/DTCP/Ma.MaNo:09/2025 நாள்:20.05.2025 -ன்படி மனைப்பிரிவு நிபந்தனைகளையும் மனைப்பிரிவு வரைபடத்தினையும் இணைத்து பத்திர பதிவு, செய்யவும் நிபந்தனைகளை நடைமுறையில் கடைபிடிக்கவும் வேண்டும்.
2. மனைப்பிரிவில் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்ய கூடாது.
3. நகர் ஊரமைப்புத்துறையால் வழங்கப்பட்ட தொழில்நூட்ப அனுமதி ஆணையின் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் முழுவதையும் பின்பற்றிட வேண்டும்.

இணைப்பு :

மனைப்பிரிவு வரைபடம் -1

ஆணையாளர்,

மயிலாடுதுறை நகராட்சி.

பெறுநர்:.

S.ஸ்ரீநிவாசன், N. பன்னீர்செல்வம் மற்றும் M. ஹாஜா நஜீமுதீன், 31/12/25

சுபம் புரோமோட்டர்ஸ்,

நெ1, பரிமள ரெங்கநாதர் கிழக்கு தெரு, திருவிழந்தூர்,

மயிலாடுதுறை.

நகல்:

1. 1-எண் இணை பதிவாளர் அலுவலகம், மயிலாடுதுறை.
2. மாவட்டநகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,மயிலாடுதுறை மாவட்டம்
3. நகராட்சி பொறியாளர் சாலை பதிவேட்டில் பதிவு செய்து தொடர் பராமரிப்பு செய்திட
4. கணினி அமைப்பாளர் (சொத்து பதிவேட்டில் கணினி பதிவு செய்திட தான பத்திர நகலுடன்)
5. வருவாய் அலுவலர் மயிலாடுதுறை நகராட்சி.
6. தனிவட்டாட்சியர், மயிலாடுதுறை அவர்களின் நடவடிக்கைக்கு.